வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அச்சப் பத்து...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

வேதாத்திரியப் பார்வையில்

திருவாசகத்தின் அச்சப் பத்து.

அருள்நிதி

மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
2. வினைக் கடல் கொளினும் அஞ்சேன்
3. அன்பு இலாதவரைக் கண்டால் அஞ்சுமாறே
4. அளி இலாதவரைக் கண்டால் அஞ்சுமாறே
5. பிணி எலாம் வரினும் அஞ்சேன்
6. ஆள் அலாதவரைக் கண்டால் அஞ்சுமாறே
7. சாதலை முன்னம் அஞ்சேன்
8. அறிவு இலாதவரைக் கண்டால் அஞ்சு மாறே
9. மன்னரோடு உறவும் அஞ்சேன்
10. கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்

1. பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்

அச்சம் தரும் பொருள்களைக் கண்டு அஞ்சலாகது என்றும் இறைவனை வணங்காதவரைக் காணவே அஞ்சுவதாகும் என்று சொல்லும் பகுதியாகும் இது.

பத்து பாடல்களை அச்சப் பத்து என்ற பகுதியில் திருவாசகத்தில் நாம் காணலாம்.

திருவாசகத்திற்கும் வேதாத்திரியத்திற்கும் உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது மகாவாக்கியம்.

கல் நெஞ்சம் கொண்டாரையும் உருகச் செய்யும், நெகிழ்ந்து கரைய வைக்கும் பாக்கள் அவை.

இதற்குமேல் வேறொரு வாசகம் உண்டோ எனும் நிலையில் இறையனுபூதியை, ஞானத்தை, பரிதவிக்கும் பக்தியை பிசைந்து பிரம்மானுபவம் சொட்டச் சொட்ட ஊறும் தேன் பலா கொண்ட பாடல்கள் கொண்டவை.

திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் உணர வேண்டுமெனில் அது கூறும் அனுபூதியில் நிலைபெற வேண்டும்.

அச்சம் என்பதே பாரதியாரின் அகராதியில் கிடையாது.

அவரது அச்சமில்லை அச்சமில்லை பாடல் மானுடத்தை இன்றைக்கும் தட்டி எழப்பி தன்னம்பிக்கைதை தந்து கொண்டிருக்கிறது.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சை கொண்ட பொருளெலாம் இழந்த விட்ட போதிலும்,

பொய்யர் தம் மெய்யும் கண்டு அஞ்சுகிறது திருவாசகம்.

"புற்றில் வாழ் அரவும் அஞ்சேன்
  பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வார் சடைஎம் அண்ணல்
  கண் நுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வம் தன்னை
  உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்
  அம்ம நாம் அஞ்சு மாறே." (திருவாசக. பா.516)

- புற்றில் வாழும் ஒளி பொருந்திய பாம்பைக் கண்டு பயப்பட மாட்டேன்.
- பொய்யர்கள் பேசும் மெய் போன்ற பொய்யைக் கண்டு பயப்படமாட்டேன்.
- நீண்ட சடைக் கற்றையும் நெற்றியில் கண்ணும் உடைய பெருமானது திருவடிகளை அடைந்து, வேறு ஒரு தெய்வம் உண்டு என்று நினைப்பவரையும், எம்பெருமானைப் பற்றி அறியாதவரையும் கண்டு நான் மிகவும் பயப்படுவேன்.

”பொய்யும் மெய்யும்” வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

“மெய்” என்றால் ஒன்றுபட்டது என்றும், “பொய்” என்றால் இரண்டுபட்டது என்றும் பொருள்படும்.

பொய் என்றால் இல்லாதது என்று பலரால் கருதப்படுகிறது. இல்லாதது எப்படி இருக்க முடியும்?

அதை எப்படிச் சொல்ல முடியும்? இருப்பதைத் தான் கருதுகிறோம், பேசுகிறோம்.

ஒருவன் ஒரு பொருளை வைத்திருக்கிறான். ஆனால் கேட்பவர்களுக்கு அப்பொருள் இல்லை என்று சொல்லுவதைப் பொய் என்று சொல்லுகின்றோம்.

அந்தப் பொருளை அவன் வைத்திருப்பது அவன் உள்ளத்தில் மறைந்து விடவில்லை, வேறு ஏதோ காரணத்தால் இல்லை என்று சொல்லுகின்றான்.

அவனுடைய உள்ளத்தில் அப்பொருள் இருப்பது, இல்லை என்று சொல்ல வேண்டுமென்பது ஆகிய இரண்டும் இருக்கின்றன.

இருக்கிறது என்ற ஞாபகத்தோடு இல்லையென்று சொல்ல வேண்டிய ஞாபகமும் கூடி இரண்டுபட்டு விட்டது.

அதே பிளவுபட்ட கருத்து, சொல்லிலும் வந்தால் அதைப் பொய் என்று சொல்லுகிறோம்.

இதே போன்று ஏக நிலையாக – அரூப நிலையாக இருந்த தெய்வநிலை, அணுவாகவும் பரிணாமம் அடைந்து விட்டபின், அது இரு நிலைப்பட்டு விட்டது.

இவைகளில் பின்னர் தோன்றிய அணு முதல் அண்ட கோடிகளையும் அவைகளின் இயக்க நிகழ்ச்சிகளையும், வேதாந்திகள் பொய் என்று சொல்லுகின்றார்கள்.

அதாவது இரண்டுபட்ட நிலை என்று சொல்லுகின்றார்கள்.

இப்படி இரண்டுபட்ட நிலைகளில், ஏக நிலையாக உள்ள அரூப நிலையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலை ஞானம் என்றும்,

அதை மறந்து இரண்டுபட்ட நிலையை மாத்திரம் கண்டு அறிவு மிரட்சி கொண்டு இயங்கி நிற்கும் நிலையை மாயை என்றும் கூறுகின்றார்கள். வாழ்க வளமுடன்

2. வினைக் கடல் கொளினும் அஞ்சேன்

கர்ம வினைகளை கழிக்க எளிய வழி சொல்லுகிறார்-விவேகானந்தர்.

நீ உண்மையிலேயே உலகிற்கு நன்மை / சேவை செய்ய விரும்புகிறாயா?

அப்படி செய்ய முடியாமல் போனதிற்காக வருந்துகிறாயா?

அப்படியானால் நீ எப்பொழுதும் நல்ல எண்ணங்களையே எண்ணி கொண்டிரு,

அதாவது கஷ்டபடுகிறவர்களுக்கு என்னனென உதவிகள் தேவையோ அதை பற்றி எண்ணி கொண்டிரு.

பிரதிபலன் கருதாமல், நாம் உலகிற்கு செலுத்தும் ஒவ்வோர் நல்ல எண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கபடுகிறது.

அத்தகைய நல்ல எண்ணம் நமது கர்ம சங்கிலியை (கர்ம வினையை) இணைக்கும் வளையம் ஒன்றை உடைத்தெறிகிறது

மக்களுக்குள் மிகவும் துன்பப் படுபவர்கள் வரை மேலும் மேலும் அது நம்மை தூய்மை படுத்திக்கொண்டே இருக்கிறது .

தொடர்ந்து புனிதமான எண்ணங்களை சிந்தித்தபடி நன்மை செய்து கொண்டே இரு, தீய விஷயங்கள் நமக்குள் தலைக்காட்டாதபடி அழுத்திவைக்க அதுதான் வழி .

நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு பிறகு சூட்சம தன்மை அடைகிறது,

பின்பு அது வித்து வடிவத்தை பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சம உடலில் வாழ்கிறது,

மீண்டும் சிறிது காலத்திற்கு பிறகு அது வெளியே வந்து தனக்கு உரிய பலன்களை தருகிறது,

இந்த பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை தீர்மானிக்கி றது இவ்விதமே மனிதன் தனக்கு தானே வாழ்க்கையை உருவாக்கி கொள்கிறான் .

உன்னுடைய ஒவ்வொரு நல்ல எண்ணமு ம் , செயலும் ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை நிரந்திரமாக பாதுகாக்க தயாராக இருக்கிறது என்பதை நீ எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்

உன்னால் முடிந்த வரை நல்ல எண்ணங்களையே எண்ணு, உலக நன்மையின் பொருட்டு அந்த எண்ணம் யாரால் செயல்படுத்த முடியுமோ அவர்கள் மனதில் தோன்றி அது (உன் எண்ணம்) செயலுக்கு வந்து விடும், (செயல்படுதலை)
குறித்து வருந்தாதே" என்கிறார் சுவாமி விவேகாந்தர்.

“வினைக் கடல் கொளினும், அஞ்சேன்" என்கிறது திருவாசகம் இப்பாடலில்.

”வெருவரேன், வேட்கை வந்தால்;
  வினைக் கடல் கொளினும், அஞ்சேன்;
இருவரால் மாறு காணா
  எம்பிரான், தம்பிரான், ஆம்
திரு உரு அன்றி, மற்று ஓர்
  தேவர், எத் தேவர்? என்ன
அருவரா தவரைக் கண்டால்,
  அம்ம! நாம் அஞ்சுமாறே!” (திருவாசக. பா.517)

- ஆசை வந்து என்னைப் பற்றினால் பயப்பட மாட்டேன்.
- வினையாகிய கடல் என்னை விழுங்கினாலும் பயப்பட மாட்டேன்.
- தங்களுக்குள் மாறுபட்டு நின்ற இருவர் தேடியும் காண முடியாத எமது தலைவனாகிய, (வேறொரு தலைவன் இல்லாத) தானே தனக்குத் தலைவனாய் விளங்குபவனது திருஉருவம் தவிர மற்றொரு தெய்வ உருவமா, அந்தத் தெய்வம் எந்தத் தெய்வம் என்று கேட்டு அருவருப்புக் கொள்ளதவரைக் கண்டு நான் மிகவும் பயப்படுவேன்.

”வினையாகிய கடல் என்னை விழுங்கினாலும் பயப்பட மாட்டேன்.” என்கிறது திருவாசகம்.

வினையையாகிய கடலை எப்படி நீந்துவது என்று வழி சொல்கிறது வேதாத்திரியம்.

மனிதன் இரண்டடுக்கு வினைப்பயனை உடையவன். பிறந்தது முதல் இன்று வரை என்னென்ன செயல்களைச் செய்தானோ அது பிராரப்த கர்மம் எனப்படும்.

கருவழியே அவனது முன்னோர்களிடமிருந்து என்ன பதிவுகளைப் பெற்றானோ அது சஞ்சித கர்மம் என்று சொல்லக்கூடிய பழவினையாகும்.

இவையிரண்டும் சேர்ந்த தொகுப்பே ஒரு மனிதனின் தன்மை (Personality) ஆகும்.

இதன் வழியாகத்தான் மனிதன் செயல்களைச் செய்து கொண்டே போவான்.

இந்தப் பதிவுகளில் நல்ல பதிவுகளும் உள்ளன, துன்பம் விளைவிக்கும் தீய பதிவுகளும் உள்ளன.

தீயவற்றைத் தவிர்த்து நல்ல பதிவுகளையே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தீய பதிவுகள் அவ்வப்பொழுது தோன்றித் தீய செயல்களைச் செய்ய வைத்து, அதன் மூலமாகத் துன்பங்களை மனிதன் அடைய வேண்டியிருக்கும்.

இவ்வாறு வாழ்வின் நோக்கத்திற்கு முரணான தீயபதிவுகள் அதிகரித்துக் கொண்டே போனால் பிறவிகள் பல பெருங்கடலாக நீளும். வாழ்வில் சலிப்புதான் ஏற்படும்.

அப்படியின்றி, துன்பத்திற்கு முடிவு கட்ட வேண்டும். வேண்டாத பதிவுகளை மாற்றி யமைக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் தான் இன்று பழக்கத்திற்கும், விளக்கத்திற்கு மிடையே மனிதன் போராடிக் கொண்டிருக்கின்றான்.

எண்ணம், சொல், செயல் ஆகிய இம்மூன்றிலான பழக்கப் பதிவுகளிலிருந்து மனிதன் விடுபட்டு, தான் விரும்பிய நல்வழியில் செல்ல அவனுக்கு முறையான உளப்பயிற்சி முறை வேண்டும்.

அதைத்தான் நமது சித்தர் பெருமான் திருமூலர் ஒரு கவியில்,

"திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்க இருவழி யுண்டு
தனக்கும் கிளைக்கும்அக் கேடில் முதல்வன்
விளைக்கும் தவம்அறம் மேற்றுணை யாமே.

என்று குறிப்புட்டுள்ளார்.

வாழ்க்கை என்ற சிறிய தோணியைப் பற்றிக் கொண்டு கடல் போன்ற வினையை கடக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டுள்ள மனிதன், அதிலிருந்து வெளிவர இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று தவம்; மற்றொன்று அறம். இவையிரண்டையும் செய்தால் அவன் மாத்திரம் அல்லாமல் அவனுக்குப் பின்வரும் சந்ததிகளும் நன்மை பெறுவார்கள் என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

மனதை உயிர்மேல் வைத்து, ஒடுங்கி நின்று தவம் செய்யும் பொழுது, மன அலை விரைவு குறைந்து, உயிரின் தன்மையை உணர்கிறான். வினையின் பதிவுகள் அவற்றின் பிரதிபலிப்புகள் இவற்றை உணர்கிறான்.

தகாத தீய வினைப்பதிவின் காரணமாக உடலிலே வரக்கூடிய நோய்களையும், மனதில் வரக்கூடிய களங்கங்களையும் அறிந்து அறநெறி மூலம் அகற்றிக் கொள்கிறான்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அதற்கு முறைப் படுத்தப்பட்ட உளப்பயிற்சி வேண்டும். அப்பயிற்சிக்குத்தான் அகத்தவம் என்று பெயர்.

அகத்தவமின்றி மன அலைச் சுழல் குறையாது. விளைவறிந்த விழிப்புநிலை வராது. பதிவு நீக்கம் பெற முடியாது.

வீடுபேற்று நிலைகிட்டாது. வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. ஆகவே நல்வாழ்வு பெற அகத்தவம் மிக மிக அவசியம்.

சிக்கல்களில் அகப்பட்டுக் கொள்ள காரணம் என்ன?

ஆன்மீக வழியிலே நமது வாழ்க்கையை வகுத்துக் கொண்டாலும், சில சமயங்களில் சிக்கல்களில் அகப்பட்டுக் கொள்ள வேண்டி இருக்கிறதே - இதற்குக் காரணம் என்ன? இதை மாற்ற வழி இல்லையா? வேதாத்திரியம் பதில் சொல்கிறது.

மனித வாழ்க்கையில் துன்பமும், துயரமும் நேர்வதற்கு மூ ன்று சூழ்நிலைகள் உள்ளன.
அவை:

1) ஆகாம்ய கர்மம்,...
2) பிராரப்த கர்மம்,
3) சஞ்சித கர்மம்.

சஞ்சித மர்மம் என்பது நமது முன்னோர்கள் செய்த புண்ணிய பாவத்தின் தொகுப்பாகும்.

அவை வழி வழியாகச் சந்ததிகளுக்கு வந்து சேரும் வினைப்பதிவாகும்.

எனவேதான் ஒரு மனிதனானவன் தான் எந்தத் தவறும் செய்யாவிட்டாலும் கூட துன்பமும் தூரமும் அவனது வாழ்க்கையில் உண்டாகி கொண்டிருக்கின்றன.

சஞ்சித கர்ம வினைப்பதிவுகளைத் தீர்த்துக் கொள்ள கீழ்க்காணும் மூன்று வழிகள் உள்ளன. அவை :

1) பிராயச்சித்தம்
2) மேல்பதிவு
3) தவம்.

வினைப்பதிவுகளை கழித்து ஆனந்தமாக வாழ்வோமாக!

3. அன்பு இலாதவரைக் கண்டால் அஞ்சுமாறே

ஒருநாள் ஜென் குருவும் அவரது சீடனும் குளக்கரையில் அமர்திருந்தார்கள்.

சீடன் பல கேள்விகளை குருவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்; குருவும் நிதானமாக பதிலளித்துக் கொண்டிருந்தார்.

“குருவே! சுயநலமிக்க அன்பிற்கும் சுயநலமில்லாத அன்பிற்கும் வித்தியாசம் என்ன? எனக்கு கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்” என்றான்.

ஜென் குரு சீடனுக்கு பதிலை எப்படி விளக்குவது என்று சற்றும் முற்றும் பார்த்தார்.

ஒரு இளைஞன் குளக்கரையில் தூண்டிலைப் பிடித்துக்கொண்டு அமர்திருந்தான். அவனருகில் கூடையில் அவன் பிடித்துப் போட்ட மீன்கள் துடித்துக் கொண்டிருந்தது.

குரு அந்த இளைஞனிடம் பேச்சு கொடுத்தார். “தம்பி! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ?” என்றார்.

அவனும் “ஆமாம் ஐயா! மீன் என்றால் எனக்கு உயிர். பிடித்து வைத்த மீன்களையெல்லாம் இன்றிரவு என் மனைவியை சமைக்கச் சொல்லி ஒரு பிடி பிடிக்கப் போகிறேன்;

உங்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்; குளத்தில் நிறைய மீன் கிடக்கிறது” என்றான்.

குருவோ, “எனக்கு வேண்டாம் தம்பி!” என்று புன்சிரிப்புடன் கூறி மறுத்துவிட்டார்.

நடப்பதையெல்லாம் சீடன் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இளைஞனும் சற்று நேரத்தில் மீன் பிடித்து விட்டு கிளம்பிவிட்டான்.

ஒரு வயது முதிர்ந்த பெரியவர் குளக்கரையை நோக்கி வருவதை ஜென் குரு பார்த்துவிட்டார்.

அவர் கையில் ஒரு வெள்ளை நிறப் பை இருந்தது. குரு அதை உற்றுப் பார்த்தார்; அது பையின் நிறமல்ல, அதிலிருக்கும் பொரியின் நிறம் என்பதை தெரிந்து கொண்டார்.

அந்த பெரியவர் குளக்கரையில் வந்து அமர்ந்தார்.

பையிலிருந்த பொரியை எடுத்து தண்ணீரில் தூவினார். நூற்றுக்கணக்கான மீன்கள் பொரி இருக்கும் இடத்தை எறும்புகள் போல மொய்த்தன.

குரு அவரிடமும் பேச்சு கொடுத்தார். “என்ன பெரியவரே! மீன் என்றால் ரொம்ப பிடிக்குமோ?” என்று சற்றுமுன் அந்த இளைஞனிடம் கேட்ட அதே கேள்வியை பெரியவரிடம் கேட்டார்.

பெரியவரும், “ஆமாம் ஐயா! மீன் என்றால் எனக்கு உயிர்; நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கு வந்து இங்குள்ள மீன்களுக்கு உணவளிப்பேன்” என்றார்.

அவரிடம் பேசிமுடித்து விட்டு சீடனின் பக்கம் திரும்பினார்.

“பார்த்தாயா! இருவரும் மீனின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிறார்கள் என்பது அவர்கள் ‘மீனென்றால் உயிர்’ என்று கூறும்போதே தெரிந்திருக்கும்.

அந்த இளைஞன், மீன்களை ‘ருசி’ என்னும் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டான். அவன் தன்னுடைய சந்தோஷத்தில் மட்டுமே கவனம் செலுத்தினான்.

ஆனால் அந்த பெரியவர் மீன்கள் பசியாறுவதற்கு சுயநலமில்லாமல் உணவளித்தார்.

இருவருக்கும் மீன்கள் பிடித்திருந்தது, ஆனால் இருவரின் நோக்கம் வேறு.

மொத்தத்தில், அன்பில் சுயநலம் இருந்தால் அது அன்பே இல்லை; சுயநலமில்லாத அன்பு தான் உண்மையானது, நிரந்தரமானது” என்று குரு சீடனுக்கு புரியவைத்தார்.

அன்பு இல்லாதவரைக் கண்டால் நான் பெரிதும் பயப்படுவேன் என்கிறது திருவாசகம்.

”வன்புலால் வேலும் அஞ்சேன்
  வளைக் கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பு எலாம் உருக நோக்கி
  அம்பலத்து ஆடு கின்ற
என் பொலா மணியை ஏத்தி
  இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்
  அம்ம! நாம் அஞ்சு மாறே.” (திருவாசக. பா.518)

- தசையைப் பறிக்கும் வலிய வேலைக் கண்டு பயப்பட மாட்டேன்.
- வளையல் அணிந்த பெண்களின் கடைக்கண் பார்வைக்கு பயப்பட மாட்டேன்.
- எலும்பு எல்லாம் உருகுமாறு அம்பலத்தில் நின்று கூத்து நிகழ்த்தும் என்னுடைய செதுக்கப்படாத மாணிக்க மணி போன்றவனை, அவனது இனிய திருவருளைப் பருக மாட்டாத அன்பு இல்லாதவரைக் கண்டால் நான் பெரிதும் பயப்படுவேன்.

அன்பின் அழைப்பு - வேதாத்திரியம்

”பஞ்சமகா பாதகங்கள் செய்தோ ரேனும்,
  பகுத்தறிவால் விளைவறிந்து எண்ணி எண்ணி,
சஞ்சலத்தில் ஆழ்ந்துள்ளம் உருக்கத் தோடு,

சன்மார்க்க நிலைகாணத் துடித்து நின்றால்,
அஞ்சாதீர்! அன்புடனே உமையும் ஏற்போம்!
அறிவுநிலை அறிவிப்போம்! அமைதி காண்பீர்!
துஞ்சாமலும் கூட நாடு வோர்க்குத்
துணைபுரிதல் எம்கடமை ஆகக் கொண்டோம்.” (ஞாக.பா.1386)

பொய், கொலை, களவு, சூது, கற்பழிப்பு ஆகிய ஐந்து பெரும் பழிச்செயல்களைச் செய்தவர்களாக இருப்பினும்,

பகுத்தறிவின் விளைவை அறிந்து, செயல் விளைவு நியதியாகிய இறைநீதியையும் உணர்ந்து, தமது செயல்களுக்காக வருந்தி,

ஆழ்ந்து மன உருக்கத்துடன் திருந்தி வாழ எண்ணுபவர்கள் சத்திய மார்க்கமாகிய, உண்மை உணர்வுடன் வாழ வேண்டும் என்று வீரும்புவார்கள்.

தமக்குத் தகுதியில்லையோ என்று பயப்பட வேண்டாம்.

அன்பு கொண்டு உங்களைப் போன்றவர்களையும் ஏற்றுக் கொள்வோம்.

உடலுக்குள் உயிர், அந்த உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்ற அறிவின் நிலையை உங்களுக்குச் சொல்லிக் கொடுப்போம்.

அதன் மூலம் அமைதி நிலை காண்பீர்களாக.

அம்மாதிரியான அன்பர்கள் எமை நாடி வருவார்களேயானால், கண் உறங்காமல், சோம்புதல் இல்லாமல் அவர்களுக்குத் துணை புரிய வேண்டும் என்பதை நமது கடமையாகக் கொண்டுள்ளோம் என்கிறது வேதாத்திரியம். வாழ்க வளமுடன்.

4. அளி இலாதவரைக் கண்டால் அஞ்சு மாறே

அஞ்சுவது அஞ்சுவது பேதமை என்றபடி அச்சம் என்பது பாரதியார் பாடல்களில் கிடையாது.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
நச்சை வாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதிலும்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.

”இறைவனின் திருவடிகளை அடைந்து, கண்களில் நீர் துளிர்க்க, கும்பிட்டு, அழுது, உள்ளம் நெகிழ்ந்து, அன்பு செய்யாதவரைக் கண்டால், நான் மிகவும் பயப்படுவேன்” என்கிறார் மாணிக்கவாசகர் இப்பாடலில்.

”கிளி அனார் கிளவி அஞ்சேன்
  அவர் கிறி முறுவல் அஞ்சேன்
வெளிய நீறு ஆடும் மேனி
  வேதியன் பாதம் நண்ணித்
துளிஉலாம் கண்ணர் ஆகித்
  தொழுது அழுது உள்ளம் நெக்கு இங்கு
அளி இலாதவரைக் கண்டால்
  அம்ம! நாம் அஞ்சு மாறே.” (திருவாசக. பா.518)

- கிளி போன்ற மொழி உடைய மகளிரது இனிய சொல்லுக்குப் பயப்பட மாட்டேன்.
- அவர்களது பொய்யான சிரிப்புக்குப் பயப்பட மாட்டேன்.
- வெண்ணிற திருநீறு பூசிய திருமேனி உடைய மறையவனாகிய எம் இறைவனின் திருவடிகளை அடைந்து, கண்களில் நீர் துளிர்க்க, கும்பிட்டு, அழுது, உள்ளம் நெகிழ்ந்து, அன்பு செய்யாதவரைக் கண்டால், நான் மிகவும் பயப்படுவேன்.

நீர் துளிர்க்க, கும்பிட்டு, அழுது, உள்ளம் நெகிழ்ந்து, இறையுணர்வு பெறவேண்டும் என்கிறது திருவாசகம்.

உச்சிக்குள் அமர்ந்து (துரியத்தில்) இறைவனின் திருவடிகளை அடையலாம் என்று வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

உச்சிக்குள் அமர்ந்த உயர் வாழ்வு - வேதாத்திரியம்.

”உச்சியிலே நீ சென்றால் உடனே காணும்
  ஓர் அதிசயம் வலமாம் சுற்று ஆகும்.
அச்சமயம் அறிவிற்கோர் வியப்புக் காணும்.
  அவ்விடத்தே நிலைத்திருக்கப் பழகிவிட்டால்,
இச்சையெலாம் பிறக்குமிடம் கண்டு கொள்வாய்,
  எதுவேண்டும்? வேண்டாமென் றிரண்டுங்கண்டு,
நச்சுவிளை இச்சையெலாம் அழித்து விட்டு,
  நலமீயும் எண்ணமே மீதங் கொள்வாய்! (ஞாக.பா.1476)

தலை நடு உச்சியல் மனதை நிறுத்தி துரிய தவம் இயற்றத் தொடங்கினால், உயிரானது சிரசில் வலப்புறமாக சுற்றுவது போன்ற ஒரு அதியமான உணர்வை உணரலாம்.

அந்த உணர்வானது அந்த சமயத்தில் அறிவிற்கு வியப்பு அளிக்கக் கூடியதாகக் காணலாம்.

தலை நடு உச்சி எனப்படும் சகஸ்ராரத்தில் மனதை நிறுத்தி நிலத்திருக்கப் பழகும்போது, மன அலைச்சுழல் வேகம் குறைந்து குறைந்து உயிர் உயிராகவே ஒன்றி நிற்கும்.

அந்நிலை அகத்துணர்வாக அடைகின்ற நிலையில் மன அமைதியின் காரணமாக எண்ணங்கள், ஆசைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பது அறிவிற்குப் புலப்படும்.

சிந்தனையினால் நல்லது கெட்டது பிரிக்கும் திறன் ஏற்படுவதால், தனக்கு வேண்டியது எது? வேண்டாதது எது? என்ற இரண்டையும் அறிந்து, துன்ப விளைவை ஏற்படுத்தக்கூடிய ஆசைகள் எல்லாம், விலகி நலமான எண்ணங்களே செயலூக்கம் பெறும்.

உச்சியில் மனதை அமர்த்தி தவம் இயற்றி வாழும்போது உயர்வான நல்வாழ்வு கிட்டும். வாழ்க வளமுடன்.

5. பிணி எலாம் வரினும் அஞ்சேன்

அபிராமி அன்னையே, அலைகடலில் உறங்கும் மாயன் திருமாலின் தங்கையே, பழமை நிறைந்த திருக்கடவூரின் வாழ்வே, அமுத ஈசன் உன்னை விட்டு விலகாமல் எப்போதும் ஒருபக்கம் பொருந்தியிருக்கிறவளே,

பதினாறு செல்வங்களையும் எனக்குத் தருவாய், அதோடு, உன்னுடைய பக்தர்களுடன் என்றென்றும் கலந்து பழகி மகிழும் வரத்தையும் அருள்வாய்!

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
  கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
  கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
  தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
  தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்- - - -
அருள்வாமி! அபிராமியே!

இராமலிங்க வள்ளலாரும் உடல் வாழ்க்கை உறுதி பயத்தற்கு
நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்" என்றும் இயம்புகின்றார்.

"- - - - - - - நோயற்ற
வாழ்வில் நான் வாழ வேண்டும்"

திருவாசகமும் "பிணி எலாம் வரினும் அஞ்சேன்" என்ற நோயற்ற
உடலை இந்தப் பாடலில் கேட்கிறது,

"பிணி எலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான் தன்
தொழும்பரோடு அழுந்தி அம் மால்
திணிநிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி வெண் நீறு
அணிகிலா தவரைக் கண்டால்
அம்ம! நாம் அஞ்சு மாறே." (திருவாசக. பா.520)

- நோய் முதலியன வந்தாலும் பயப்பட மாட்டேன்.
- பிறப்புக்கும் இறப்புக்கும் பயப்பட மாட்டேன்.
- பிறைச் சந்திரனை அணிந்திருப்பவனின் அடியார்களோடு கூடி, அவனது பேரின்பத்தில் முழ்கித் திளைத்து. வலிய நிலத்தைப் பிளந்து சென்று திருமால் காணமுடியாத சிவந்த திருவடிகளை வாழ்த்தி. வெண்ணீற்றைப் பூசாதவரைக் கண்டால் நான் மிகவும் பயப்படுவேன்.

பிணியற்ற - உடல் நலம் காக்க யோக வாழ்வு? வேதாத்திரியம்.

வீட்டில் உள்ள அனைத்து மின்சார கருவிகளும் சீராக இயங்குவதற்கு மின்காந்த சக்தியின் அழுத்தத்தையும் ஓட்டத்தையும் சீராக வைத்துக் கொள்வதில் விழிப்போடு செயல்படுகிறோம்.

அதுபோல்
உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் சீராக இயங்குவதற்கு உடலில் உற்பத்தியாகும் உயிராற்றலாகிய சீவகாந்தச க்தியின் அழுத்தத்தையும் ஓட்டத்தையும் சீராக பராமரிக்கும் வாழ்க்கை முறையே உடல்நலம் காக்கும் யோக வாழ்வு.

உடல்நலம் காக்க கடைப்பிடிக்க வேண்டிய யோக நெறிகள்!

1) உணவு சீரணமாகும்போது உண்டாகும் கழிவுப்பொருட்கள் யாவும் உடலில் தேங்காமல் நாள்தோறும் வெளியேறுவதற்கும், இரத்தம், வெப்பம், காற்று, உயிர் ஆகிய நான்கும் தடையில்லாமல் சீராக ஓடுவதற்கும், எளியமுறை யோகா உடற் பயற்சிகளை முறையாக செய்துவர வேண்டும்.
2) உடல் உறுப்புகளை இயக்குவதற்குத் தேவையான சீவகாந்தசக்தி, உடல் செல்களில்தான் உற்பத்தியாகிறது. உடல் செல்களில் சீவ ரசாயனங்களின் அளவும் தரமும் பராமரிக்கப்படும் அளவுக்குத்தான் செல்களில் உற்பத்தியாகும் உயிர்ச்சக்தியின் அழுத்தமும் அமையும்.
3) சீவகாந்தசக்தியின் அழுத்தம் சீராக இருக்கும்போது தான் அது உடல் உறுப்புகளில் தடையில்லாமல் ஓடும்.
4) உடலுறுப்புகள் யாவும் நோயில்லாமல் இயங்கும்.
5) உடல் செல்களில் சீவ ரசாயனங்களின் அளவும் தரமும் பராமரிக்கப்பட, உணவு உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம் ஆகிய ஐந்திலும் அளவுமுறை காக்க வேண்டும்.
6) சுற்றுப்புற சூழல், சந்தர்ப்ப மோதல், கோள்களின் சஞ்சாரம், கருவமைப்பு இவற்றாலும் உடலில் ரசாயனக் குழப்பம் ஏற்படாமல் காத்துக்கொள்வதில் விழிப்பு ணர்வுடன் செயல்பட வேண்டும்.

உடல்நலம் காக்கும் அறிவில் முழுமைபெற உடலின் அமைப்பு, இயக்கம் ,மற்றும் விளைவுகள் பற்றிய தெளிவான அறிவு மனிதனுக்கு வேண்டும்.

இவ் வறிவைத்தான் ”தன்னை அறிந்த அறிவு' என்று வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

யோகக்கலையின் நோக்கமே தன்னை அறிவதுதான். தன்னை அறிந்த அறிவே துன்பமில்லாமல் வாழ்வதற்கான அறிவும் ஆகும். உடல் நலம் காப்போம். பிணியின்றி ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

6. ஆள் அலாதவரைக் கண்டால் அஞ்சுமாறே

ஔவையாரின் மூதுரை சொல்கிறது.......

நல்லவர்களை காண்பதும் நல்லதே, நல்லவர்கள் சொல்லும் பயன் நிறைந்த சொற்களை கேட்பதும் நல்லதே.

நல்லவர்களின் உயர்ந்த குணங்களை பிறரிடம் சொல்வதும் நல்லதே, அத்தகைய நல்லவர்களோடு சேர்ந்து இருப்பதும் நல்லதே தான்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று"

தீயவர்களைப் பார்ப்பதும், பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

இறைவனது திருவடிகளை தம் தலை மேல் சூடிக் கொள்ளாத மனிதரைக் கண்டால், நான் மிகவும் பயப்படுவேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

"வாள் உலாம் எரியும் அஞ்சேன்;
  வரை புரண்டி டி னும், அஞ்சேன்;
தோள் உலாம் நீற்றன், ஏற்றன்,
  சொல் பதம் கடந்த அப்பன்,
தாள தாமரைகள் ஏத்தித்,
  தட மலர் புனைந்து, நையும்
ஆள் அலாதவரைக் கண்டால்,
  அம்ம! நாம் அஞ்சுமாறே!" (திருவாசக. பா.521)

- ஒளியோடு கூடிய நெருப்புக்குப் பயப்பட மாட்டேன்.
- மலை புரண்டு வந்தாலும் பயப்பட மாட்டேன்.
- தோளில் நீறணிந்த, இடப வாகனமுடைய, சொல்லுக்கும் பதத்துக்கும் அப்பாற்பட்டு விளங்கும் தந்தையின் திருவடித் தாரைகளை வாழ்த்தி, அத்திருவடிகளைத் தம் தலை மேல் சூடிக் கொள்ளாத மனிதரைக் கண்டால், நான் மிகவும் பயப்படுவேன்.

சத்சங்கம் – வேதாத்திரியம்

.

மனிதன் அறிவு ஐயுணர்வுகளிலும் மெய்யுணர்வு நிலையிலும் மாறி மாறி இயங்கிக் கொண்டிருப்பதால் புலன் கவர்ச்சியில் சிக்கி அடிக்கடி உணர்ச்சி வயமாகி செயல்கள் விளைகின்றன.

அதன் விளைவாக வாழ்வில் துன்பங்களும் தொல்லைகளும் சிக்கல்களும் பெருகுகின்றன.

இச்சிக்கல்களிலிருந்து விடுபட மெய்யுணர்வு நிலையில் அடிக்கடி அறிவைச் செலுத்திவர வேண்டும்.

இந்த நன்மையைப் பெற சத்சங்கம் ஒன்றுதான் தக்க உதவியாய் இருக்கும் – என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

"மனவளக்கலை மன்றத்தில்' பயிற்சி எடுத்துப் பாருங்கள். கணக்குப் போட்டுப் பாருங்கள்.

'மனவளக்கலை மன்றத்திற்கு' வந்ததால் என்னென்ன நன்மைகள் வந்தன? சினிமாவுக்கு, கோயிலுக்குப் போனதால் என்னென்ன நன்மைகள் வந்தன?

இரண்டு மாதங்கள் கழித்து மனதுக்கு, தெளிவோ, அமைதியோ, வெற்றியோ, மகிழ்வோ இருக்கிறது என்றால் அதைப் பின் பற்றி வாருங்கள்.

இல்லை, இதைவிட எனக்குக் கோயிலுக்குப் போனதனால், சினிமாவுக்குப் போனதனால் நன்றாக இருக்கிறது என்று சொன்னால், இன்னும் சில நாட்களுக்கு அதையே தொடருங்கள்.

ஆனால், 'மனவளக்கலை மன்றம்' மனிதனை மனிதன் ஆக்க வல்லது. மனதைத் திடப்படுத்த வல்லது.

மனது திடம் இல்லாததனால்தான் வாழ்க்கைச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை; தாங்கிக் கொள்ள முடியவில்லை; அதைப் போக்கிக் கொள்ள முடியவில்லை.

அப்போதுதான் சினம் உண்டாகிறது. துன்பம் உண்டாகிறது. மனதிலே நல்ல வலு இருக்குமேயானால் இதெல்லாம் தானாகவே போக்கி விட முடியும்.

உங்கள் கையில் ஏதேனும் பொருள் இருக்குமேயானால், அப்போது விருந்தினர் வந்துவிட்டால் அச்சமில்லை. 'உட்காருங்கள். இதைச் சாப்பிடுங்கள். அதைச் சாப்பிடுங்கள்' என்பீர்கள்.

உங்கள் கையில் பொருள் இல்லையானால் எப்படி இருக்கும்? சோர்வு இருக்கும். அதே போல,

மனம் வளமாக இருக்குமேயானால் ஏதேனும் புதிய சிக்கல்கள் தோன்றும் போது அதைச் சோர்வு இல்லாது தாங்கிக் கொள்ளலாம்.

வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் எதையெடுத்தாலும் போக்கிவிட முடியும் என்று நினைக்காதீர்கள்.

அல்லது பிறருடைய வாழ்க்கைச் சிக்கல்களை நாம் போக்கிவிட முடியும் என்ற அகம்பாவமும் யாருக்கும் வேண்டாம்.

அவரவர்களே போக்கிக் கொண்டால் தான் முடியும். அதற்கு மற்றவர்கள் உதவி செய்ய முடியும்; ஒத்துழைக்க முடியும்.

ஒரு கிணற்றுக்கு, இன்னொரு கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீரைச் செலுத்தி நிரப்ப இயலாது; அந்தக் கிணறு நிறையாது.

அதனுடைய தன் ஊற்று வந்தால்தான் எப்போதுமே கிணறு நி ரம் பும். ஒருவருக்கு ஏதோ ஒரு சிரமம் இருக்கிறது.

பத்து ரூபாய் கொடுத்தோம். அந்தச் சிரமம் போய்விட்டது என்பது இல்லை. இன்றைக்குப் பத்து ரூபாய் கொடுத்தோம் என்றால் நாளைக்கு இருப்பது ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைவரும்.

ஒவ்வொருவருடைய உள்ளமும் ஒரு பெரிய சுரங்கம். அறிவாலும், ஆற்றலாலும் அதை வளர்க்க வேண்டும். அதைத் தான் 'மனவளக்கலை மன்றம்' செய்கிறது.

உடலாலும் மனதாலும் மனிதனை மேல் நோக்கி வரச் செய்ய அவர்கள் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் வழிப்படுத்தி வாழ வைக்கத் தேவையானப் பயிற்சிகளை அளிக்கிறது."

7. சாதலை முன்னம் அஞ்சேன்

மரணமில்லா வாழ்வு யாருக்குத்தான் வேண்டாம்? ஆனால் அதை எப்படி அடைவது?

சத்தியமாக சொல்லுகிறேன், பொய் இல்லை...நிச்சயமாக அப்படி ஒரு மரணம் இல்லா பெருவாழ்வைப் பெறலாம் என்கிறார் வள்ளலார்.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்று எழும் கண்ணீர் அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருள் அமுதே நன்னிதியே ஞான
நடத்து அரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணம் இல்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்"

திருவாசகத்தில் இப்பாடலில் " சாதலை முன்னம் அஞ்சேன்" என்கிறார் மாணிக்கவாசகர்.

"தகைவு இலாப் பழியும் அஞ்சேன்;

சாதலை முன்னம் அஞ்சேன்;
புகை முகந்து எரி கை வீசி,
பொலிந்த அம்பலத்துள் ஆடும்,
முகை நகைக் கொன்றை மாலை,
முன்னவன் பாதம் ஏத்தி,
அகம் நெகாதவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே!” (திருவாசக. பா.522)

- தடுக்க முடியாத பழிக்குப் பயப்பட மாட்டேன்.
- முன்னமே சாவதற்குப் பயப்பட மாட்டேன்.
- புகையயும் நெருப்பைக் கையில் ஏந்தி அம்பலத்தில் நின்று கூத்து நிகழ்த்தும் மலரும் பருவத்துக் கொன்றை மாலை அணிந்த முன்னவனின் திருவடிகளைப் புகழ்ந்து, உள்ளம் நெகிழாதவரைக் க் ணடால், நான் மிகவும் பயப்படுவேன்.

மரணமில்லா நிலை வேதாத்திரியம்

”மனம் புலன் உணர்வில் மயங்கிட மாயை ஆம்.
மனம் உயர் வெளியி னல் மருவித் தோய்ந்திட!
மனம் விரிந்து அறிவெனும் மாபதம் எய்திடும்!
மனம் அறிவாகிய மனதினும் தெய்வமே. (ஞாக.பா.1176)

பல கோடிப் பிறவிகளிலும், பழகிக் கொண்ட பழக்கத்தால் மனிதன் தன் அளவில், உடல் அளவில் மனதை எல்லைக் கட்டிக் கொண்டு புலன் உணர்வில் மயங்கிய நிலையில், உண்மைக்கு மாறான முறையில் வாழ்வது மன மயக்கமாகிய மாயையின் காரணமாகும்.

மனமானது தனது எல்லை கட்டியுள்ள தளைகளைத் தகர்த்து மனதை உயிரில் ஒடுக்கி, அறிவு என்ற நிலையில் வி வடை யும்போ து. உயர்வான தெய்வீக நிலை கைவல்யமாகும்.

மனம் அறிவு என்ற நிலையில் இயங்கும் போது அவனில் அடங்கியுள்ள தெய்வீகத் தன்மைகள் வெளிப்படும்.

”மனம் மாய என்பார்கள் மனநிலை மாற்றத்தை
மனம் மாய்வதே இல்லை,மனம் மெய்ப் பொருளாகி
மனமே அறிவாக மறு பிறப்பு எய்திடும்
மனம் அறிவான பின் மரணமில்லா நிலை.”

மனநி லையாது மாறிக் கொண்டே இருப்பதால் மனதை அடக்க வேண்டும். அழிக்க வேண்டும் என்பார்கள்.

மனம் அடங்காது மனதை அடக்க நினைத்தால் அடங்காது. அறிய நினைக்க வேண்டும்.

மனமானது விரிவடைந்தால் மெய்ப்பொருளாகி அறிவாக மறுபிறப்பை அடையும்.

மனம் அறிவாக இருந்து செல்படுமே யானால் இறப்பும் இல்லை. பிறப்பு இல்லை. அதுவே மரணமில்லா பெருவாழ்வு ஆகும்.

”மனமது இயற்கையதன் மாபெரும் நிதியலோ
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே
மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்
மனத்திலே உள எல்லாம் மறறெங்கு தேடுவீர்?”

மனம் என்பது இயற்கை என்னும் இறைநிலையின் ஒரு பகுதியாக தெய்வீகப் பெரிய நிதியாக மனிதனுக்கு கிட்டியுள்ள பெரும் பேறாகும்.

மனம் உலகியல் சார்ந்த விஷயங்களில் தன்முனைப்போடு தாழ்வுறுமேயால் மனிதன் துன்பத்தை அனுபவிக்கிறான்.

மனதை உயர்த்தி விரித்து அறிவு என்ற நிலையில் இறை முனைப்பினால் இன்பம் அனுபவிக்கிறான்.

இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் ஆகிய அனைத்தும் மனித மனதிலேயே உள்ளது.

மனதை அறிய முற்படாமல் வேற எங்கு தேடினாலும் எதையும் கண்டறிய முடியாது. வாழ்க வளமுடன்.

8. அறிவு இலாதவரைக் கண்டால் அஞ்சு மாறே

காட்டின் நடுவே ஒரு சிறு கோயில். அதில் ஒரு ஜென் குரு.

அவர் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தார். மக்கள் நடுவே செல்வதோ, அறிவுரை, போதனை என்று தடபுடல் செய்வதோ கிடையாது.

ஒரு சமயம் அவ்வழியாகப் புத்த பிட்சுக்கள் சிலர் வந்தனர். அவர்களது முகமே அவர்கள் மிகப் பெரிய படிப்பாளிகள் என்பதை உணர்த்தியது.

வந்தவர்களுக்கு குரு உபதேசித்தார்.

"உங்கள் பெயர்?" என்று கேட்டனர் வந்தவர்கள்.

"என் பெயர் ஹோகன்!" என்றார் குரு.

"ஞான குரு ஹோகன் தாங்களா?"

"இல்லை. நான் குருவும் அல்ல. பெரிய ஞானம் எதுவும் எனக்குக் கிடையாது!" என்றார் குரு.

உணவு முடிந்து இரவு அங்கேயே தங்கினர் பிட்சுக்கள். இரவு குளிராய் இருக்கவே குளிர்காயத் தீமூட்டிச் சுற்றிலும் அமர்ந்து கொண்டனர்.

தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர். பேச்சு மெல்ல மெல்ல மத சம்பந்தமான தத்துவங்களில் திரும்பியது. அதுவே விவாதமாக மாறியது.

சிறிது நேரத்தில் விவாதம் சூடுபிடித்தது. உரத்த குரலில் அவர்கள் பேச ஆரம்பிக்கவே, தூக்கம் கலைந்த குரு ஹோகன் மெல்ல எழுந்து வந்து அவர்கள் நடுவில் அமர்ந்தார்.

பிறகு விவாதம் மனிதனின் அகவாழ்வு, புறவாழ்வு பற்றித் திரும்பியது.

"மனிதனின் புறவாழ்வே மாயம். அக வாழ்வுதான் மரணத்துக்குப் பின்பும் தொடரும். எனவே அதுதான் சாசுவதம்!" என்றார் ஒருவர்.

"அகம் என்பதே வெறும் எண்ணங்களின் குவியல். கனவில் கண்ட செல்வம் ஒருவனுக்கு நிஜ வாழ்வில் உதவாது. ஆகவே அகம் என்பது மாயை. தோன்றும் உலகம் தொடரும் வாழ்வு இதுவே உண்மை!" என்றார். வேறொருவர்.

"உலகமே ஒரு மனோ ரீதியான மாயை!" என்பது இன்னொருவரின் வாதம்.

"இல்லை. உலகம் உண்மை. புறநிலையின் பிரத்தியட்சம்!" என்ற கருத்தை வலியுறுத்தினார் ஒருவர்.

"உலகம் உண்மைதான். அதைத் தாண்டிய மானஸ வாழ்வும் உண்மைதான். அதையும் தாண்டிய பயணம்தான் மிக முக்கியமானது!" மற்றொருவர் விவாதம் இப்படி இருந்தது.

கடைசியில் தீர்ப்புக் கேட்டு, அவர்கள் குரு ஹோகன் பக்கம் திரும்பினார்கள்.

"உங்கள் கருத்து என்ன? உலகம் பிரத்தியட்சமான உண்மையா? அல்லது மனோ ரீதியான மாயையா?" கேள்விகளால் துளைத்தெடுத்தார்கள் குருவை.

ஹோகன் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"அதோ ஒரு பெரிய பாறை தெரிகிறதே, அது மனதின் மாயையா? அல்லது பிரத்தியட்சக் கண்கூடா?"

"போதி சத்துவரின் கண்ணோட்டத்தில் எல்லாமே மனத்தின் மாயைதான். தோன்றும் பொருட்கள், தோன்றாப் பொருட்கள் யாவுமே மனத்தின் சலனக் காட்சிகள்தான். அந்த வகையில் அந்தப் பெரிய "பாறை நிஜம் அல்ல. அது என் மூளையில் இருப்பதுதான்."

"அவ்வளவு பெரிய கல்லை உங்கள் மூளையில் சுமந்து கொண்டு திரிகிறீர்களே! உங்கள் தலை ரொம்பக் கனக்காதோ?"

குரு ஹோகன் போட்ட போடு அவர்களுக்கு மெய்யறிவை உணர்த்தியது. தங்கள் வாத வல்லமைகளையும், அறிவின் கனத்தையும் மூட்டிய தீயில் பொசுக்கிவிட்டு அவரின் சீடராயினர்.

"திருவடிகளைக் கண்டு வணங்கி. சிறப்புற்று இருக்க முடியாத, அறிவு இல்லாதவரைக் கண்டால் நான் மிகுதியும் பயப்படுவேன்" என்கிறார் மாணிக்கவாசகர் இப்பாடலில்

"தறி செறி களிறும் அஞ்சேன்
  தழல் விழி உழுவை அஞ்சேன்
வெறி கமழ் சடையன் அப்பன்
  விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
  சிறந்து இனிது இருக்க மாட்டா
அறிவு இலாதவரைக் கண்டால்
  அம்ம! நாம் அஞ்சு மாறே."   (திருவாசக. பா.523)

- தறி கெட்டுத் திரியும் யானையைக் கண்டு பயப்பட மாட்டேன்.
- நெருப்பைக் கக்கும் கண்ணினை உடைய (கோபக் கனல் வீசும்) புலியைக் கண்டு பயப்பட மாட்டேன்.
- மணம் வீசும் மலர்மாலை சூடிய சடையுடைய எம் தந்தை. தேவர்களும் நெருங்க முடியாதவன்.
- அவனது வீரக் கழல் அணிந்த திருவடிகளைக் கண்டு வணங்கி. சிறப்புற்று இருக்க முடியாத, அறிவு இல்லாதவரைக் கண்டால் நான் மிகுதியும் பயப்படுவேன்.

அறிவில் முழமை பெற்றவர்களாக இருந்தால் இறைவனின் திருவடிகளை அடையலாமே?

அறிவின் முழுமை நிலை வேதாத்திரியம்

"அறிவு உடலில் உயிரில் புலன்கள் மூலம்
  அனுபவத்தால் வளர்ந்து, அகத்தவம் ஆய்வாற்றி,
அறிவு உயர்ந்தகன்று, "மெய்ப்பொருள்" நான் என்று

அனுபவமாய் உணர்ந்தமைதி பெற்ற காலை,
அறிவு அகத்ததுவாயும், ஆதிவெளி நிலையாயும்,
அதனின்நுண் சுழல்அணுவாய் இயங்கும் உண்மை
அறிவு உணர்ந்துணர்ந்து. பிரபஞ்சம் தன்னுள்
அடங்கி இயங்கல் அறிய, நிறை பேறாகும்.” (ஞாக.பா.1235)

மனித அறிவானது, உடலிலும் உயிரிலும் இயக் கம பெற்று புலன்களின் மூலம் அடையும் அனுபோக அனுபவங்களால் வளர்ச்சியடைகிறது.

அகநோக்குப் பயிற்சியாகிய தவத்தின் மூலம் மன அலைச்சுழல் வேகத்தைக் குறைத்து, அகத்தாய்வின் மூலம் மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்நிலையில் அறிவானது உயர்ந்தும் விரிந்தும் மெய்ப்பொருளாகிய இறைநிலையே நான் என்று அனுபவமாக உணர்ந்து அமைதி பெறுகிறது.

அந்த அமைதி நிலையில் இறைநிலையில் பின்நிலையாகிய அறிவை அகத்துணர்வாக உணர முடியும்.

அறிவை அறிந்த பின், எல்லா இயக்கங்களுக்கும் ஆதியாக மூலமாக இருக்கக் கூடியது சுத்தவெளி நிலையானது.

அதனுடைய நுண்ணிய இயக்கம் தற்சுழல் உடைய அணு என்ற உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

அந்த அனுபவத்தை மீண்டும் மீண்டும் உணரும் போது பிரபஞ்சம் என்ற பேரியக்க மண்டலமே தன்னில் அடங்கி இயங்கிக் கொண்டுள்ளது என்பதை அறியும் நிலை, நிலைபேறு எனப்படும். அந் நிலையே அறிவின் முழுமைப்பேறு ஆகும்.

அந்நிலையை அறிந்து, அடைந்து அனபவிப்பதே மனிதப் பிறவியின் நோக்கம் ஆகும். நாமும் அந்நிலையை அடைந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

9. மன்னரோடு உறவும் அஞ்சேன்

நரேந்திரனுடன், பேசிக்கொண்டிருந்த அந்த வேளையிலேயே திடீரென பரவசநிலைக்கு போய் விட்டார் ராமகிருஷ்ணர்.

அவர் எந்த நேரத்தில் இப்படிப்பட்ட நிலையை அடைவார் என யாராலும் கணிக்க முடியாது.

அந்த நாராயணனே கதாதரனாக (ராமகிருஷ்ணரின் முந்தையப் பெயர்) அவதரித்துள்ளார் என்பது ராமகிருஷ்ணருக்கும், அவரது சீடர்களுக்கும் தெரியும்.

அவர் இப்படிப்பட்ட நிலையை அடையும் போது அவரது சீடர்கள் அவரைத் தெய்வப் பிறவியாக எண்ணுவர். மற்றவர்களின் பார்வையில் அவர் பித்தராகப் படுவார்.

நரேந்திரன் அவரை அப்படியே உற்றுப்பார்த்தார். இப்போது ராமகிருஷ்ணரின் கை மெதுவாக நரேந்திரரைத் தொட்டது.

அவ்வளவு தான்! இதற்கு முன் கால் கட்டை விரலால் தன்னை அழுத்தியபோது ஏற்பட்ட அந்த உணர்வு மீண்டும் ஆட்கொண்டது.

ஆனால், முதல்முறை அலறியது போல இம்முறை அவர் அலறவில்லை.

தாங்கமுடியாத ஏதோ ஒரு உணர்வு ஆட்கொண்டாலும் கூட, நரேந்திரர் அப்படியே தன்னை மறந்துவிட்டார்.

அதன் பிறகு அவரது மனதில் எழுந்த எண்ண அலைகள் எப்படியோ இருந்தன.

அவர் சிவபெருமானின் அவதாரமாக தனக்குத்தானே தெரிந்தார். அவரது முற்பிறப்பு அவரது மனக்கண் முன் வந்தது. அப்போது ராமகிருஷ்ணர் அவரிடம் பல கேள்விகளைக் கேட்டார்.

நரேந்திரா! உன் பூர்வ ஜென்ம கதையைச் சொல்? என்றதும், நரேந்திரன் பேச ஆரம்பித்தார்.

அடுத்த கேள்விகள், நீ எவ்வளவு காலம் இந்த பூமியில் வாழ்வாய்?, நீ இந்த உலகில் என்னென்ன ஆன்மிகப் பணிகள் செய்யப் போகிறாய்?... இப்படியே கேள்விகள் தொடர்ந்தன.

இதற்கு நரேந்திரன் ஒவ்வொன்றாக பதில் சொல்லிக் கொண்டே வந்தார். ஒரு கட்டத்தில் பரவசநிலையை விட்டு வெளியே வந்ததும், அவருக்கு என்ன நடந்தது என்பெதல்லாம் மறந்து விட்டது.

எப்படியோ, இறைவனைப் பார்க்க முடியும் என்ற தன் கருத்தை மக்களிடம் பரப்ப ஒரு நல்ல சீடன் அமைந்து விட்டான் என்பதில் ராமகிருஷ்ணருக்கு பரமதிருப்தி.

சில சமயங்களில் விவேகானந்தர் தொடர்ந்து வராமல் போய்விடுவார்.

அப்போதெல்லாம் தன்னைத் தேடி வருகிறவர்களிடம், நரேந்திரனை எங்கு பார்த்தாலும் வரச் சொல்லுங்கள், என்பார் ராமகிருஷ்ணர்.

பொதுவாக சிஷ்யர்கள் தான் குருவைத்தேடி செல்வார்கள். இங்கே சிஷ்யனைத் தேடி குரு அலைந்து கொண்டிருந்தார். அதுதான் விவேகானந்தர் என்ற மாபெரும் மனிதனின் தனிச்சிறப்பு.

சுவாமி விவேகானந்தரை ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆட்கொண்டதைப் போல இறைவனே மாணிக்கவாசகரை ஆட்கொண்டார்

"மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்;
  மன்னரோடு உறவும் அஞ்சேன்;
நஞ்சமே அமுதம் ஆக்கும்
  நம் பிரான் எம்பிரான் ஆய்,
செஞ்செவே ஆண்டு கொண்டான்
  திருமுண்டம் தீண்ட மாட்டாது,
அஞ்சுவார் அவரைக் கண்டால்,
  அம்ம! நாம் அஞ்சுமாறே!" (திருவாசக. பா.524)

- மேகத்தினிடம் உண்டாகும் இடிக்குப் பயப்பட மாட்டேன்.
- எந்நேரத்திலும் பகையாக மாறும் மன்னர்களது நட்புக்கும் பயப்பட மாட்டேன்.

விடத்தை அமுதாமாகும் நம் தலைவனாகிய இறைவன் நம்மைச் செம்மையான முறையில் ஆட்கொண்டான். நெற்றியில் திருநீறு பூசாதவர்களையும். பூச அஞ்சுபவர்களையும் கண்டால் நான் மிகுதியும் பயப்படுவேன்.

இறையுணர்வு பெற்றால் இறைவனின் திருவடியை அடையலாமே"

இறைநிலை - வேதாத்திரியம்

"இறைநிலை என்னுள்ளும்,
  யான்இறை நிலையுள்ளும்,
உறையும் உண்மையை,
  உணர்ந்துணர்ந்தே மகிழ,
நிறைநிலை பெற்றபின்,
  நினைப்பதும் உரைப்பதும்,
மறையெனப் போற்றியே
  மக்கள் மகிழ்கிறார்." (ஞாக.பா.1690)

இறைநிலை தன் நிலையில் மாற்றம் பெற்று, பிரபஞ்சத் தோற்றமாகி, ஓரறிவு சீவன் முதல் ஆறறிவு மனிதன் வரை மலர்ச்சி பெற்றுள்ளது.

இறைநிலையின் ஒரு பகுதியே நானுமாகி உள்ளது. எனக்குள்ளாக இறைநிலையும், இறைநிலைக் குள்ளாக நானும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

ஒரு கைப்பிடி பயறை தண்ணீரில் ஊறப் போட்டால், சிறிது நேரத்தில் தண்ணீருக்குள் பயறும், பயறுக்குள் தண்ணீரும் இருப்பதுபோல உணர்ந்து மகிழ்ச்சியுற்றேன்.

இறைநிலையே எல்லாமாக ஆகி நானுமாக ஆகியிருக்கிறது, என்ற நிறைநிலை உணர்வு பெற்ற பின்னர், நினைப்பது, கூறுவது என்ற அனைத்துமே மறைபொருளாக உள்ள இறைநிலையேதான் என்று மக்கள் போற்றி மகிழ்கிறார்கள். வாழ்க வளமுடன்.

10. கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்

உங்களுக்கு ஒன்று தெரியுமா? கௌதம புத்தர் அவரிடம் புதிதாக சேர்ந்து படிக்கும் மாணவர்களை ஒரு மூன்று மாத காலம் சுடுகாட்டில் பிணங்கள் எரிவதை பார்த்து வரச் சொல்வாராம், அதுதான் ஆரம்ப பயிற்சி.

உலகத்திலேயே இன்று வரை அதிகளவில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம பேர்களை ஞானம் அடைய வைத்த ஒரு தேர்ந்த குரு கௌதம புத்தர்.

பயத்திலேயே மிக உச்சமான பயம் மரணம். இன்னும் சொல்லப்போனால் மற்ற அனைத்து பயங்களுக்கும் மூல காரணம் மரணம்தான்.

உண்மையான ஆன்மிகம் கடவுளை காண்பதோ அல்லது தரிசனம் செய்வதற்கு முன்னர், நாம் மரணத்தை பற்றி தெரிந்துகொண்டு அதை கடந்து வர வேண்டியிருக்கும்.

ரமண மகரிஷி ஆன்மிக வாழ்க்கையை வாழ்வதற்கு முன்னதாக வீட்டில் யாரும் இல்லாத சமயம் ஒரு மரண பய அனுபவத்தை அனுபவிப்பார். அதுவே அவர் பிற்காலத்தில் பெரிய ஆன்மீக வாதி ஆவதற்கு காரணமாக இருந்தது

சுவாமி விவேகானந்தர் ஒரு வீர துறவி இளமையில் மல்யுத்தம் பயின்ற மல்யுத்த வீரர், அவரது மல்யுத்த குரு அம்பிகா சேரன் குகா என்பவர்.

மிக திடமான உறுதியான மனம் கொண்டவ ர் சிறு வயதில் தன்னை ஒத்த வயதுடைய பிள்ளைகள் பேய்கள் என்றவுடன் பயந்த போது இவர் துணிச்சலாக பயமில்லாமல் இருந்தவர்.

அப்படிப்பட்டவர் ஒருமுறை அவருடைய குரு ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் நீங்கள் கடவுளை கண்டிருக்கிறீர்களா எனக்கு அதை காட்ட முடியுமா? என்று கேட்டார்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் தன்னுடைய வலது காலை சுவாமி விவேகானந்தரின் இருதயத்தில் வைத்தார்.

அவருக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டு அனுபவத்தில் தான் இறந்து விடுவோம் என்ற ஒரு பயம் ஏற்பட்டது.

சுவாமி விவேகானந்தர் அவருடைய குருவிடம் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எனக்கு பெற்றோர்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் என்னை நம்பி இருக்கிறார்கள் என்ற பயத்துடன் ராமகிருஷ்ணரிடம் முறையிடுவார்.

அடிப்படையில் பயம் ஏன் வருகிறது என்று பார்த்தால் நாம் உடல் மீது கொண்டுள்ள அதிகமான பற்று தான் அதற்குக் காரணம்.

உடல் தான் நாம் என்று நினைத்து விடுகிறோம் அதனுடைய ஆழமான பற்றின் காரணமாக அதைப் பற்றிய பயம் வருவது தவிர்க்க முடியாதது.

தியானம் என்ற கருவியின் மூலம் உடல் தாண்டிய நம் உண்மையான சொரூபம் நிதர்சனமான உண்மைத்தன்மை என்னவென்று தெரிந்து கொண்டபின் எதைக் கண்டும் பயம் இருக்க போவதில்லை.

ஆனால் தியானம் செய்வதற்கே பயம் என்றால், தனிப்பட்ட முறையில் ஏன் எதற்கு எவ்வாறு என்ற ஆராய்ந்து பார்த்து அந்த பயத்தை களைய வேண்டியிருக்கும்.

மாணிக்கவாசகர் எமனுக்கும் பயப்படமாட்டேன். மரணபயம் தனக்கு கிடையாது என்று இப்பாடலில் சொல்லுகிறார்.

”கோண் இலா வாழி அஞ்சேன்
  கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள் நிலா அணியி னானை
  நினைந்து நைந்து உருகி நெக்கு
வாழ் நிலாம் கண்கள் சோர
  வாழ்த்தி நின்று ஏத்த மாட்டா
ஆண் அலாதவரைக் கண்டால்
  அம்ம! நாம் அஞ்சு மாறே. ” (திருவாசக. பா.525)

- கொல்லும் தன்மை உடைய அம்புக்கு பயப்பட மாட்டேன்.
- எமனது கோபத்திற்கும் பயப்பட மாட்டேன்.

நீண்ட பிறைச் சந்திரனை அணிந்துள்ளவனை, நினைத்து, மனம் கசிந்து உருகி.

ஒளி பொருந்திய கண்களில் கண்ணீர் வழிய, வாழ்த்தி வணங்க மாட்டாத ஆண்தன்மை இல்லாதவரைக் கண்டு, மிகவும் அஞ்சுவேன்.

இறைநிலையை உணர்ந்தவர்க்கு மரணமென் தில்லை!

"இறைநிலையை உணர்ந்தவர்க்கு மரணமென் தில்லை!
  எனினும் போற்றலுள்ள இயற்கை நீதிகாண
மறைவதுண்மை மண்ணுலகில் பிறந்தவர் எல்லாரும்
  மற்றபடி ஞானியர்கட்கு மரணம் எவ்வாறென்றால்,
உறை உயிர் உடலில் ஆம் உயிர்சமாதி ஒன்ற
  உற்றநண்பர் போல நடித்துப் பணம்பொருள் பறிக்க
இறைநிலையை உணர்வதுபோல் பாசாங்கு செய்து
  இணைந்த நண்பர் கொன்றிடுவார் உலகறிந்த உண்மை!"
(ஞாக.பா.1057)

பிறப்பு என்னும் போதே இறப்பு என்பதும் அதனை ஒட்டியே வந்து விடுகிறது.

கருமையக் களங்கங்கள் நீங்காதவரை பிறப்பும் இறப்பும் மனித குலத்தில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இறைநிலையை உணர்ந்தவர்கள் பிறவித் தளையிலிருந்து விடு ஒடதால் அவர்களுக்கு மரணம் என்பது வராது.

ஆனாலும் பேராற்றலான இறைநீதியானது தோற்றங்களை எல்லாம் மறையச் செய்கிறது என்ற உண்மையையும் காண்கிறோம்.

மண்ணுலகில் பிறந்தவர்கள் எல்லோரும் ஒருநாள் மறைந்தே விடுகிறார்கள்.

ஞானியர்களின் மரணமோ, உடலில் உயிரை உறைய வைத்து, உயிரை வெளியேற்றாமல் உயிருடன் சமாதி ஆகிறார்கள்.

இப்படி ஒரு வகையில் மறைவு நிகழ்கிறது.

மற்றொரு வகையானது மிகவும் நெருக்கமான நண்பர்களைப் போல நடித்து, பணம், பொருட்களைப் பறிக்க வேண்டும் என்ற கபட எண்ணத்துடன் ஞானியர்களிடம் பொய்யாக நடித்து, இறைநிலையை உணர்வது போல பாசங்குகள் செய்து கொன்று விடுவார்கள் என்பது உலகம் அறிந்த ஒன்று ஆகும். வாழ்க வளமுடன்.

துணைநின்ற நூல்கள்.

1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாணிக்கவாசகர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5. இணையதள தகவல்கள்.
6. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
7. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
8. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
9. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
10. ஸ்ரீராமகிருஷ்ணரின் ஓர் அமுதமொழிகள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை